[14th March 1966

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: நல்லபடியாக அவர்களுக்குத் தண்ணீர் கிடைக்கச் செய்யவேண்டுமென்பதற்காகத் தான் இந்தத் திட்டம் திட்டப்பட்டிருக்கிறது. உடனடியாகத் திட்டம் போட்டு அவசரமாகச் செய்வதற்கு ஒன்றும் இல்லை.

* 279 **கேள்வி.—திரு. ஆ. தங்கவேலு:** கனம் சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கோயில்பட்டி நகரத்திற்குக் குடி நீர் வழங்கும் திட்டம் ஏதேனும் அரசாங்கத்தின் பரிசிலனையில் இருக்கிறதா?

(இ) ஆம் எனில், குழாய் அமைக்கும் வேலை எப்பொழுது துவங்கும்?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: (அ) கோவில்பட்டிக்குக் குடி நீர் வழங்கு திட்டம் ஒன்றை 27,500 ரூபாய் மதிப்பீட்டுச் செலவில் புலனாய்வு செய்ய அரசாங்கம் அனுமதி அளித்துள்ளது.

(இ) புலனாய்வு முடிந்து, திட்டத்தை அரசாங்கம் பரிசிலனை செய்து அங்கீகரித்த பின்னரே நீர் வழங்கு திட்டத்தை நிறைவேற்றும் வேலையை மேற்கொள்ள முடியும்.

சிதம்பரத்தில் புதைவடிகால் திட்டம்

* 280 **கேள்வி.—திரு. சி. சிவசுப்பிரமணியன்:** கனம் சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தென்னார்க்காடு மாவட்டம், சிதம்பரம் டவுனுக்கான Drainage scheme தற்போது எந்த நிலையிலுள்ளது?

(இ) அத் திட்டம், எப்பொழுது முடிக்கப்படும்?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: (அ) சிதம்பரம் புதை வடிகால் திட்ட வேலை துரிதமாக நடைபெற்று வருகிறது. சுமார் 76 சதவீதம், வடிநீர்க் குழாய்கள் பதித்து இணைக்கும் வேலை முடிவடைந்திருக்கிறது. இரு மண்டலங்களில் வடிநீர் இறைக்கும் நிலையங்கள் கட்டும் வேலையும் துரிதமாக நடைபெற்று வருகிறது.

(இ) இத் திட்டம் 1967-68-ல் முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

Court Fees

* 281 *Q.*—SRI C. KOTHANDARAMA BAGAVATHAR: Will the Hon. the Minister for Co-operation be pleased to state the number of Courts inspected and the number of cases examined by the Court Fee Examiners of the High Court, Madras in 1964?

THE HON. SRI N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR: Fourty-eight Courts were inspected and 23,282 cases were examined by the Court Fee Examiners of the High Court in 1964.